**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 180 – சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

பகுதி 1 - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை.

பகுதி 2 - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை.

## பகுதி 1

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| செலவினத் தலைப்பு | திணைக்களப் பெயர் |
|---|---|
| 289 | விவசாய ஏற்றுமதிக் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 755,520,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 655,281,940 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய ஏற்பாடுகளுக்கான சேமிப்பு முறையே ரூபா 40,752,699 தொகையாகவும் ரூபா 59,485,361 தொகையாகவும் அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 21 சதவீதத்திற்கும் 11 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு /திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 180 | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 125,160,000 | 70,400,000 | 113,919,453 | 40,887,848 | 11,240,547 | 29,512,152 |
| 289 | விவசாய ஏற்றுமதிக் திணைக்களம் | 317,460,000 | 242,500,000 | 277,469,326 | 223,005,313 | 39,990,674 | 19,494,687 |
| | மொத்தம் | 442,620,000 | 312,900,000 | 391,388,779 | 263,893,161 | 51,231,221 | 49,006,839 |

**(ஆ) வேறு அமைச்சு மற்றும் மாவட்டச் செயலகங்களால் வழங்கப்பட்ட ஏற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக அமைச்சிற்கு வேறு அமைச்சுக்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களால் பின்வருமாறு ரூபா 51,186,000 தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு மற்றும் மாவட்டச் செயலகம் | பெறப்பட்ட ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு/ மிகை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 50,406,000 | 41,474,646 | 8,931,353 |
| மாவட்டச் செயலகம் - கொழும்பு | 480,000 | 492,225 | (12,225) |
| மாவட்டச் செயலகம் - கம்பஹா | 300,000 | 194,333 | 105,667 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 180 | 18001 | 2,500,000 | 2,218,669 | 1,000,000 | 1,441,164 | 12,300,000 | 6,276,553 |
| 289 | 28901 | 29,500,000 | 24,188,727 | 20,000,000 | 27,562,726 | 110,000,000 | 90,132,658 |

**2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்**

**(அ) கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 527,802,404 கூட்டுத்தொகையான இரண்டு வரவு மீதியும் ரூபா 527,800,270 தொகையான செலவு மீதியும் நிலவியது. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரவு/ (செலவு) மீதி |
|---|---|
| | ரூபா |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 1,800 |
| விவசாய ஏற்றுமதிக் திணைக்களம் | 527,800,604 |
| மேற்படி | (527,800,270) |

**(ஆ) பொது வைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களத்திற்கான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,776,209 ஆனதுடன் இது தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 6000/0000/00/0015/0189/000 | 48,772 |
| விவசாய ஏற்றுமதித் திணைக்களம் | 6000/0000/00/0015/0144/000 | 2,727,437 |
| | | 2,776,209 |

## பகுதி 2

**ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை**

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 180 – சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியறிக்கைகள், இணைக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 06 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள்,

இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (ஆ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) 06 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,150,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிப்பாகவிருந்தது.

(ii) 18 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 29 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சாக காணப்பட்டது.

### (ஆ) கட்டுநிதிக் கணக்கு

நிதிப் பிரமாணம் 371 (2) இன் பிரகாரம் துணைக் கட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 09 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 105,570 தொகையான உப கட்டுநிதியைத் தீர்ப்பதற்கு 1 மாதம் முதல் 10 மாதங்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 30 ஆம் திகதி வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) வேறு நிறுவனங்களிடம் உள்ள சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்.**

விவசாய அமைச்சிடம் உள்ள ரூபா 6,300,000 பெறுமதியான 03 வாகனங்கள் 2010 ஆம் ஆண்டு முதல் அமைச்சின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்கள் சட்ட ரீதியாக கையேற்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

அமைச்சால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 585,026 ஆகக் காணப்பட்டதுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அவை ஆண்டிற்கு மேற்படாத பொறுப்புகளாகும்.

## 1.6 செயலாற்றல்

**கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்**

(அ) அமைச்சால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி கமத்தொழில் மேம்பாட்டு அதிகாரச்சட்டம் மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தை நாளதுவரையாக்கி நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 மே 31 இல் உள்ளவாறும் ஏற்றுமதி கமத்தொழில் மேம்பாட்டு அதிகாரச்சட்டம் மாத்திரம் வரைவாக்கப்பட்டு காணப்பட்டது.

(ஆ) அமைச்சால் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் தரப்பினரை அறிவூட்டுவதற்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி வினாவிடை நிகழ்ச்சியைத் தயாரிப்பதைக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இவை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்வரும் செயற்பாடுகள் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை எய்தியிருக்கவில்லை.

(i) சிறு ஏற்றுமதி பயிர்த் துறையில் தேசிய கொள்கை நூலொன்றையும் சட்ட வரையறையையும் தயாரித்து ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கொள்கை நூல் 2013 மே 31 இல் உள்ளவாறும் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெருவாரியான கொக்கோ பயிர்ச்செய்கைக்காக ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) துறையின் விருத்தி உத்தியோகத்தரின் கருத்தையும் இயலுமையையும் விருத்தி செய்வதற்காக 12 செயலமர்வுகள்

திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 06 மாவட்டங்களுக்காக 02 செயலமர்வுகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(iv) 12 பிராந்திய தொழில்முயற்சிச் செயலமர்வுகள் மீளாய்வாண்டின் போது நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 04 செயலமர்வுகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(v) திட்டமிடப்பட்டவாறு கமத்தொழில் அமைப்புகளை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் 12 " புதிய 2 வாசனைத் திரவியங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் மூன்று மாத சஞ்சிகை ஒன்றை வெளியிடுதல்" மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந் நிகழ்ச்சித்திட்டமும் வெளியீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) 1972 இன் 11 ஆம் இலக்க இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் திருத்தத்தைச் சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அத் திருத்தங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2012 யூன் 03 முதல் 10 வரையான காலத்தின் போது இந்தியாவின் லக்னவ்வில் இடம்பெற்ற கரும்புச் செய்கை தொடர்பான ஆய்வுச் செயலமர்விற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் கலந்துகொண்டிருந்ததுடன் புலிப் பயங்கரவாதிகளின் ஆதரவாளர்களின் எதிர்ப்பின் காரணமாக யூன் 07 ஆம் திகதி மீளச் சமூகமளித்திருந்தார். இவ் வெளிநாட்டுப் பயணத்திற்காக 08 நாட்கள் தங்குமிடக் கொடுப்பனவும் ஒன்றித்த படிப்பணமாக 2,800 அமெரிக்க டொலர்களும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் பயணத்தை முதலே பூர்த்தி செய்து மீள வருகை தந்திருந்தமையால் 02 நாட்களுக்காகச் செலுத்தப்பட்டிருந்த 700 அமெரிக்க டொலர் படிப்பணத்தை மீள அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 மனித வள முகாமைத்துவம்

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 11 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 51 | 36 | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 27 | 23 | 04 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக ஒப்பந்த அடிப்படை) | 02 | 02 | - |
| | மொத்தம் | 95 | 73 | 22 |

மீளாய்வாண்டின் இறுதியில் 22 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 289 – விவசாய ஏற்றுமதித் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

விவசாய ஏற்றுமதித் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 12 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு இணக்க கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரினதும், கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமுறையில் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய வகையிலான

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், வர்த்தகத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இதன் (அ) முதல் (இ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,500,000 தொகையான மொத்த ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 52 செலவின விடயங்களின் கீழ் ரூபா 559,960,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 500,474,639 தொகையான ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து ரூபா 59,485,361 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்பு அச் செலவின விடயத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

02 வருடங்களை விஞ்சிய ரூபா 947,220 தொகையான 03 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமானம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

இளைப்பாறுதல், காலமாதல் மற்றும் சேவையை விட்டுச் செல்வதன் காரணமாக ரூபா 908,016 தொகையான நிலுவைக் கடன் மீதி 2012 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் இதில் 11 ஆண்டுகள் முதல் 17 ஆண்டுகள் வரையான கால வீச்சில் நிலவிய ரூபா 243,550 தொகையான கடன் மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 2.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 27 ஆம் திகதி வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இதன் படி உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினைச் செயற்படுத்தல்**

2009 யூன் 09 ஆம் திகதிய டீஎம்எஸ்/2009/(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக 03 கூட்டத்தொடர்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**2.5 சொத்து முகாமைத்துவம்**

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைந்த பயன்பாட்டுடன் நிலவியமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது

| | சொத்தின் வகை | அலகின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைந்த பயன்பாட்டுடன் நிலவிய காலம் |
|---|---|---|---|
| | | | ஆண்டுகள் |
| (i) | கட்டிடம் | 03 | 03 இற்கு மேல் |
| (ii) | வாகனம் | 03 | 03 இற்கு மேல் |
| | வாகனம் | 06 | 01 – 03 இடைப்பட்டது. |
| (iii) | ஏனைய சொத்துக்கள் | | |
| | அலவாங்கு | 33 | 03 இற்கு மேல் |
| | சூரிய கதிர் ஒளியூட்டி | 04 | 30 இற்கு மேல் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்**

2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின்

பிரகாரம், 2012 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 34 அலகுகளில் 20 அலகுகளின் அறிக்கை 2013 ஏப்ரல் 18 ஆம் திகதியும் 14 அலகுகளின் அறிக்கை 2013 யூன் 19 ஆம் திகதியுமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இவ்வாறே இவ் அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தமை**

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, கமத்தொழில் திணைக்களம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை புகையிரதத் திணைக்களம், 19 பிரதேச செயலகங்கள் மற்றும் தனியார் தரப்பினரிடம் உள்ள 49 காணித் துண்டுகள் (350 ஏக்கர் விஸ்தீரணமானவை) முறையான வகையில் கையேற்கப்படாது திறைசேரி ஏற்பாட்டைப் பயன்படுத்தி நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

திணைக்களத்தால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகளின் பெறுமதி ரூபா 98,198,055 ஆகக் காணப்பட்டதுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| 01 ஆண்டிற்குக் குறைவானவை | 01 ஆண்டிற்கு மேல் 05 ஆண்டுகளுக்குக் குறைவானவை | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 89,137,371 | 9,060,684 | 98,198,055 |

**2.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104 மற்றும் 109(1) | 61,764 | பயிரை உறுதிப்படுத்தும் ஓர் சேவை திணைக்களத்தில் அமுலாக்கப்பட்டிருந்த போதிலும் காய்ந்த பயிர்கள் புத்தகங்களிலிருந்தும் பதிவேடுகளிலிருந்தும் கைவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 115(4) | 577,500 | முன்னைய ஆணடுகளுக்கு உரித்தான செலவினம் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | | திணைக்களத்திடமுள்ள 67 வாகனங்க ளுக்கும் 11 டிராக்டர்களுக்கும் எரிபொருள் இடப்படுவது தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

## 2.7 வங்கிக் கணக்குகளைப் பேணுதலிலான குறைபாடுகள்

### (அ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளைத் தயாரிப்பதிலான நீண்ட தாமதம்

வங்கிக் கணக்கிற்கு உரித்தான 2012 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள் 2013 ஏப்ரல் 30 இல் உள்ளவாறும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சீராக்கப்பட வேண்டிய மீதி**

விசசாய ஏற்றுமதித் திணைக்களத்தால் 2012 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படும் சீராக்கம் தொடர்பான விபரத்தின் படி கண்டறியப்பட்ட தகவல்கள் பின்வருமாறாகும்.

| | | காலப்பகுப்பாய்வு | | |
|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவானவை | 01 வருடத்திற்கு மேல் 03 ஆண்டுகளுக்குக் குறைவானவை | கூட்டுத்தொகை |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புகள் | 45,848 | - | 45,848 |
| (ii) | வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள் | 85,602 | 36,298 | 121,900 |

**2.8 நட்டங்களும் இழப்புகளும்**

2012 யூலை 26 ஆம் திகதி திணைக்களத்திற்கு உரித்தான பஜிரோ ஜீப் வண்டி கள்வர்களால் களவாடப்பட்டதாக சாரதிகளின் கூற்றிலும் நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் ஆரம்ப விசாரணையின் மூலம் இனங்காணப்பட்ட போதிலும் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்டம் ஏற்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கை 2013 யூன் 03 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது போக்குவரத்துச் செலவினமும் உள்ளடங்கலாக கஸ்நாவ தோட்டத்திற்காக பயிர் நிலையக் கொள்வனவிற்காகச் செலுத்தப்பட்ட விலைகளும் சந்தை விலைகளும் தொடர்பான ஆய்வின் போது ரூபா 100,050 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் சில களஞ்சியங்களில் மிகையான பொலித்தீன் இருப்புகள் இருக்கையில் நாற்று மேடைகளின் தேவைப்பாட்டிற்காக புதிதாக பொலித்தீன் இருப்பு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது இரு களஞ்சியங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலான காலம் முதல் நிலவும் பின்வரும் 108,475 கிலோ கிராம் மிகையான பொலித்தீன் இருப்பு நிலவியது.

| பரீட்சிக்கப்பட்ட களஞ்சியம் | கொள்வனவு செய்யப்பட்ட திகதி | அளவீடு | அளவு கிலோகிராம் |
|---|---|---|---|
| மாத்தளை ஆராய்ச்சி மற்றும் பண்ணை களஞ்சியம் | 2004.12.20 இற்கு முன்னர் | 10“ X 12“ | 40,000 |
| | 2008.01.25 இற்கு முன்னர் | 10“X 07“ | 44,000 |
| பிளெக் வோட்டர் பண்ணை களஞ்சியம் | 2007.10.16 இற்கு முன்னர் | 10“X 07“ | 24,475 |
| | | | 108,475 |

இவ்வாறே மாத்தளை ஆராய்ச்சி மற்றும் பண்ணை களஞ்சியத்தின் பல்வேறு அளவுகளிலான பழைய பயன்படுத்தப்படாத இருப்பு 201.5 கிலோகிராமாகக் காணப்பட்டது.

**2.10 மனித வள முகாமைத்துவம்**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 84 | 49 | 35 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 823 | 322 | 501 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 354 | 315 | 39 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக ஒப்பந்த அடிப்படை) | 97 | 130 | - | 33 |
| | மொத்தம் | 1,363 | 820 | 576 | 33 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 576 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆட்சேர்க்கப்பட்ட மிகையான ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.